# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


# "நாம் தேவனுடைய அன்பையும் நீதியையும் நம்முடைய இருதயங்களில் நிறைவேற்ற வேண்டும்"

## 2015 மான்மின் தலைவர்கள் கருத்தரங்கு பூரண ஆவியின் ஓட்டத்தோடுகூட நடைபெற்றது

1



2



3



4



2015 மான்மின் தலைவர்கள் கருத்தரங்கானது பூரண ஆவியின் ஓட்டத்தின் மத்தியில் நடைபெற்றது. அறிவர். ஜோராக் லீ அவர்கள் செய்தியை வழங்கினார் (படம் 1); பரலோக சத்த பாடற்குழுவினர் மற்றும் பரலோக நடன குழுவினர் விசேஷித்த கலைநிகழ்ச்சிகளை ஏறெடுத்தனர் (படம் 3); பங்குபெற்ற போதகர்கள், பணியாளர்கள் மற்றும் அங்கத்தினர்கள் தேசங்களின் கொடிகளை அசைத்தவாறு சேர்ந்து துதிகளை ஏறெடுத்தனர் (படம் 2); ஆண்கள் குழுவின் தலைவர்கள் (படம் 4).

2015 ஜூன் 29 முதல் ஜூலை 1 வரை, 2015 ஆம் ஆண்டிற்கான தலைவர்கள் கருத்தரங்கு "அன்பு" (1யோவான் 4:16) என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்றது. தேவன் அவர்களுக்கு பூரண ஆவியின் ஓட்டத்தை 2015ல் கொடுத்தார். அவர்கள் பூரண ஆவியை முழுமைப்படுத்த, தேவனுடைய அன்பையும், நீதியையும் புரிந்துக்கொண்டு, அவற்றை தங்களுடைய இருதயங்களில் நிறைவேற்ற வேண்டும்.

கருத்தரங்கானது காங்வொன் மாகாணத்தில் உள்ள விவல்டி பூங்காவில் நடைபெற்றது. ஜனங்கள் பிரதான அரங்கத்தில் இருக்கும் டையமண்ட் எனப்படும் கூடத்திலும், மற்ற ஒன்பது சிறிதான அரங்குகளிலும் இணைந்து பங்குபெற்றனர். கனடா, அமெரிக்கா, பெல்ஜியம், இஸ்ரேல், எஸ்டோனியா, DR காங்கோ மற்றும் இந்தியா உட்பட 23 நாடுகளிலிருந்து அநேக போதகர்கள், பணியாளர்கள் மற்றும் அங்கத்தினர்கள் வந்திருந்தனர்.

2015ல், தேவன் மான்மின் அங்கத்தினர்களுக்கு பூரண ஆவியின் ஓட்டத்தை (தேவனை பிரியப்படுத்தக்கூடிய விசுவாசம் - 1தெசலோனிக்கேயர் 5:23) கொடுத்தார். அவர்கள் வாஞ்சையோடு விசுவாசத்தில் வளரும் காலக்கட்டத்தில் இந்த கருத்தரங்கு நடைபெற்றது. அது நேரடியாக ஆறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது: ஆங்கிலம், சீனம், ஜப்பானியம், ரஷ்யம், மங்கோலியம் மற்றும் இந்தோனேஷியம்.

அறிவர். ஜேராக் லீ அவர்கள், பூரண ஆவியை முழுமையாக அடைவதற்கு தேவனுடைய மெய்யான சுபாவங்களாகிய அன்பையும் நீதியையும் நாம் புரிந்துக்கொள்ள வேண்டும் என்பதைச் சொல்லி செய்தியை ஆரம்பித்தார். அவர் முதலாவதாக அன்பை குறித்துப் பேசினார்; அந்த அன்பு மனித குலத்தின் பண்படுத்துதலுக்காக அனைத்தையும் ஆயத்தப்படுத்தி, எல்லாவற்றையும் தியாகம் செய்து, நமக்கு அனைத்தையும் ஏற்படுத்திக் கொடுத்த தேவனுடைய அன்பாகும். தேவன் நம்மை இரட்சிக்கும்படியாக தம்முடைய ஒரே பேறான குமாரனை சிலுவையில் கொடுத்தபோது, அவர் கொண்டிருந்த துக்கத்தையும், புலம்பலையும் அறிவர். லீ விளக்கினார். மேலும், அவர் சிருஷ்டிப்பில் பதிக்கப்பட்டிருந்த தேவனுடைய அன்பையும் விவரித்தார்.

இரண்டாவதாக, அவர் நீதியை குறித்து விளக்கினார். நீதி என்பது ஒழுங்குகள் அல்லது தேவன் ஏற்படுத்திய நியமங்களாகும். அது கணித சூத்திரத்தைப் போன்று செயல்புரிகிறது. நம்முடைய சூழ்நிலையை நாம் நீதியின் சூத்திரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் விளைவுகளை கணிக்க முடியும். சில சூழ்நிலைகள் நூலிழைகள் ஒன்றொடொன்று பிணைந்து உண்டான சிக்கலைப் போல இருக்கும். அப்பேற்பட்ட சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற நீதியின் சட்டத்தை அறிந்துக் கொள்வதற்கு நாம் ஆழமான ஆவிக்குரிய நிலைகளுக்குள் நுழைய வேண்டும்.

மூன்றாவது குறிப்பு அன்பும் நீதியும் ஒருங்கிணைந்து செயல்புரிய வேண்டும். தேவனுடைய அன்பையும் நீதியையும் விளக்குவதற்கு அறிவர். லீ நோவாவின் ஜலப்பிரளயம், சோதோம் கொமோராவின் நியாயத்தீர்ப்பு, நினிவே மீதான நியாயத்தீர்ப்பு மற்றும் ஏழு வருட மகா உபத்திரவ காலத்தின் பொறுக்கி எடுக்கும் இரட்சிப்பு போன்றவற்றை மேற்கோளிட்டு விளக்கினார். ஆண்டவருடைய அன்பும் நீதியுமானது, சிலுவையின் மூலமான அவருடைய இரட்சிப்பின் ஊழியம், விபசாரத்திலே கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்ட ஸ்தீரியின் சம்பவம் (யோவான் 8), மற்றும் யூதாஸ்காரியோத்துவின் சம்பவத்தின்மூலம் விளக்கப்பட்டது. பங்கு பெற்றவர்கள் 2010 ஆம் ஆண்டு முதல் ஆவி மற்றும் பூரண ஆவியின் ஓட்டத்தின் மூலமாக பரவிக் கொண்டு வருகிற மேய்ப்பருடைய அன்பையும் நீதியையும் மறுபடியும் நினைவுகூர்ந்தனர்.

அதன்பின்பு, எலியா, ஏனோக், ஆபிரகாம், மோசே மற்றும் அப்போஸ்தலனாகிய பவுல் போன்றோர் எப்படி அன்பையும் நீதியையும் நிறைவேற்றி, பூரண ஆவியை அடைந்தனர் என்பதும் விளக்கப்பட்டது. இப்பேற்பட்ட உதாரணங்கள் பூரண ஆவிக்குள் நுழைவதற்கு நாம் ஆழமான நற்குணம் மற்றும் அன்பின் நிலைகளை நிறைவேற்றி, எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதை காண்பிக்கிறது.

நான்காவதாக, அறிவர். லீ சபையின் சில போதகர்கள் மற்றும் தலைவர்களை உதாரணமாக வைத்து, எதினால் அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி தேக்கநிலையில் இருக்கிறது என்று விளக்கினார். அதற்கான காரணங்கள், நியாயத்தைச் சார்ந்திருக்கும் நீதியின் கட்டமைப்பு; அன்பைச் சார்ந்திருக்கும் நற்குணத்தின் கட்டமைப்பு; அன்பு மற்றும் நீதியில் காணப்படும் குறைகள் போன்றவையாகும். ஏன் இன்னும் சில அங்கத்தினர்கள் வளர்ச்சியடையாமல் ஆவியின் நிலையிலேயே நிற்கின்றனர் என்பதையும் அவர் விவரித்தார்.

கடைசியாக அவர், "தேவனுடைய அன்பில் நீதி அடங்கியிருப்பதால் அது பூரண அன்பாக இருக்கிறது. அவருடைய அன்பும் நீதியும் நிகரற்ற உயர்ந்த அளவில் இருக்கின்றன. அவற்றை ஒருங்கிணைந்தவையாக இருக்கின்றன. தேவனுடைய பிள்ளைகள் அவருடைய அன்பையும் நீதியையும் புரிந்துக் கொண்டு, அவைகளை அடைவதின்மூலம் பூரண ஆவியின் கனிகளை விளைவிக்க முடியும்" என்று சொன்னார்.

கூடுதலாக, முதல் நாள் மதிய வேளைக்குப் பிறகு, மான்மின் ஜெப மையத்தின் தலைவி திருமதி. போக்னிம் லீ பரிசுத்த ஆவியானவரின் நிறைவு ஜெபக்கூட்டத்தை நடத்தினார். பங்குபெற்றவர்கள் மனந்திரும்பி, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டனர். இந்த கருத்தரங்கின் மூலம் அவர்கள் விசுவாசத்தில் துரிதமாய் வளர்ந்து, ஆவி மற்றும் பூரண ஆவியின் இருதயத்தை அடையப்பெறும்படியாக தங்களுடைய மனதை நிர்ணயித்துக் கொண்டனர்.

இரண்டாம் நாள் காலையில், கலைநிகழ்ச்சி செயற்குழுவின் தலைவர், போதகர் ஹீஜின் லீ செய்தி கொடுத்து பங்குபெற்றவர்களுடன் ஜெபித்தார். அவர்கள் பரலோகத்திற்கான நம்பிக்கையையும், தேவனுடைய அன்பையும் அதிகமாக உணர்ந்தனர். அவர்கள் துதித்து, தங்களுடைய இருதயத்தின் தூபத்தை ஏறெடுத்தனர். மூன்றாம் நாளில், அவர்கள் தண்ணீர்பூங்காவில் இன்பமான நேரத்தை செலவிட்டனர்.

இந்த கடைசி காலத்தில், நாம் பூரண ஆவியின் இருதயத்தைப் பெற்று தேவனுடைய அநாதி தீர்மானத்தில் இணைய வேண்டும் என்பதற்காக, தேவன் நம்மை ஜீவனுள்ள வார்த்தைகளை கேட்கவும், ஜெபிக்கவும், அற்புத அடையாளங்கள் மற்றும் வல்லமையான கிரியைகளை பார்க்கும்படி ஆசீர்வதித்துள்ளார். தேவனுக்கே மகிமையும் நன்றியும் உண்டாவதாக!



தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ

# தேவன் விரும்புகிற இருதயம்

என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" (நீதிமொழிகள் 8:17)

•••

தேவன் தம்முடைய பிள்ளைகளின் ஆவிகள் மற்றும் அவர்களது சரீரங்கள் ஆகிய இரண்டிற்கும் நற்காரியங்களை கொடுப்பதற்கு எப்போதும் ஆயத்தம்செய்து கொண்டிருக்கிறார். தங்கள் இருதயங்களைத் திறந்து அதன்பின் அவரை முழு மனதோடு தேடுகிற தம்முடைய பிள்ளைகளை தேவன் சந்திக்கிறார். அவர் அவர்களை ஆசீர்வாதங்கள் மற்றும் பதில்களின் பாதைக்கும் வழிநடத்துகிறார்.

ஜீவனுள்ள தேவனை சந்திப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? தேவனை சந்திப்பதில் மிக அடிப்படையான முக்கிய காரியம் என்னவென்றால் அவரை சந்திப்பதற்கு ஊக்கமாக விரும்ப வேண்டும் (நீதிமொழிகள் 8:17, எரேமியா 29:13).

**1. நீங்கள் தேவனை உங்கள் இருதயத்திலிருந்து ஊக்கமாக தேட வேண்டும்**

தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக நம்மை நேசிக்கிறார். அவர் நம்மை முந்தி தேடினார். அவர் நம்மை வந்து சந்திக்கும்படியாக நாம் நம்முடைய இருதயங்களைத் திறப்பதற்கு தேவன் நம்மை வலுகட்டாயப்படுத்தமாட்டார். அவர் நீதியின்படி கிரியை செய்வார். அதனால் நாம் நம்முடைய இருதயங்களை மனப்பூர்வமாய் திறக்கும்போது மட்டுமே அவரால் நம்முடைய இருதயங்களுக்குள் வந்து நம்மை சந்திக்க முடியும்.

இது வெளிப்படுத்தின விசேஷம் 3:20ல் எழுதப்பட்டபடியே உள்ளது. "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்." மேலும் மத்தேயு 5:3ல் வாசிக்கிறோம், "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது."

"எளிமையான" ஆவியை கொண்டிருப்பதற்கு தேவனை தேடுவதிலிருந்து நம்மை தடை பண்ணுகிற உலக சிற்றின்பங்கள் மற்றும் அர்த்தமற்ற ஆசைகள் போன்ற காரியங்களிலிருந்து நாம் நம்முடைய இருதயத்தை விடுக்க வேண்டும். அப்போது, தேவனை சந்திப்பதற்கு ஊக்கமான ஆசை நமக்கு உண்டாயிருக்கும். மேலும், நாம் தேவனைத் தாழ்மையாய் தேடும்போது அவர் நம்முடைய இருதயத்தின் மேலே வர முடியும்.

முக்கால்வாசி ஜனங்கள் கஷ்டங்களை சந்திக்கும் போது தான் ஆவியில் எளிமையாகின்றனர். உலக முறைமைகளால் எவ்விதமும் தீர்க்க முடியாத பிரச்சனை உங்களுக்கு இருக்குமாயின், நீங்கள் களிகூர்ந்து நன்றி செலுத்துவீர்கள் என நான் நம்புகிறேன். இது நீங்கள் தேவனை ஊக்கமாய் தேடி அவரை சந்திப்பதற்கான சிறந்த வாய்ப்பாக ங்களுக்கு இருக்கிறது.

சங்கீதம் 40:2 "பயங்கரமான குழியிலும், உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின் மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி" என்று சொல்கிறது. ஏசாயா 55:6ல், "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்" என்று வாசிக்கிறோம். உங்களுக்கு ஊக்கமான இருதயமிருந்தால் நீங்கள் தேவனை சந்திக்கக் கூடிய இடங்களுக்கு இப்போது நீங்கள் செல்ல வேண்டும்.

இப்போது, ஜீவனுள்ள தேவனை எப்படி சந்திப்பது என்பதை விளக்கமாகப் பார்ப்போம். நீங்கள் அவரை வார்த்தை, ஜெபம், துதி மற்றும் ஆராதனையின் மூலமாக சந்திக்க முடியும்.

**2. நீங்கள் தேவனுடைய வார்த்தையை கேட்டு, உணர்ந்து, பயிற்சி செய்ய வேண்டும்**

வேதாகமம் தேவன் யார் என்பதையும், மனுக்குலத்திற்கான அவருடைய சித்தம் என்ன என்பதையும் நமக்குச் சொல்கிறது. அது விசேஷித்த விதமாக தேவன் நம்மை எந்த அளவு நேசிக்கிறார் என்பதை நமக்குச் சொல்கிறது. வேதாகமத்தின் மூலமாக, நாம் இக்காரியங்களைப் புரிந்துக் கொண்டோம். மேலும் அந்த அளவு தேவனில் நம்முடைய விசுவாசமும் வளரும். தேவனைச் சந்திப்பதில் முக்கியம் என்னவென்றால், நாம் வார்த்தையின்படி வாழவும், வேதத்தைக் குறித்து கேட்டு வாசிக்கவும் வேண்டும்.

வேதாகமம் பரிசுத்த அவியின் வெளிப்பாட்டினால் எழுதப்பட்டது. ஆதலால் நாம் உண்மையான அர்த்தத்தை பரிசுத்த ஆவியின் உதவியினால் புரிந்துக் கொள்ள வேண்டும். அப்போது வார்த்தையானது ஜீவனுள்ளதும் செயல்படுகிறதுமாயிருக்கும். அது ஆவியையும் ஆத்துமாவையும் கணுக்களையும் ஊன்களையும்கூட பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாய் இருக்கும் (எபிரெயர் 4:12). தேவனுடைய வார்த்தையை எழுத்தின்படி அல்லது அறிவாக மட்டும் அறிந்திருப்பது தேவனைச் சந்திப்பதற்கு உத்தரவாதம் அளிக்காது. நாம் குறித்த காரியங்களில் செய், செய்யாதே, கைக்கொள் அல்லது விட்டு விலகு என்று நமக்குச் சொல்கிற வார்த்தைக்கு கீழ்ப்படியும்போது வாழ்வின் பலதரப்பட்ட பிரச்சனைகள் தீரும்; ஆசீர்வாதங்கள் நம்மீது வரும்.

**3. ஊக்கத்தோடு ஜெபத்தில் நீங்கள் கதறிக் கூப்பிட வேண்டும்**

நாம் ஊக்கமாக ஜெபித்தால், பரிசுத்த ஆவியானவரால் நாம் உந்தப்படுவோம். மேலும், நாம் தேவனுடைய இருதயத்தையும் வார்த்தையில் அடங்கியுள்ள சித்தத்தையும் நன்குப் புரிந்துக் கொள்வோம். மேலும், தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றுவதற்கு நமக்குப் பெலன் அளிக்கப்படும். எல்லாவற்றிற்கும் மேலாக ஜெபம் என்பது ஒருதலை பேச்சுவார்த்தையல்ல. ஆனால் தேவனை நாம் சந்திக்கக் கூடிய நேரடியான தொடர்பு வாயிலாக இருக்கிறது. அது தேவனோடுள்ள சம்பாஷணையாக இருக்கிறது.

அவருடைய பிள்ளைகள் ஜெபிக்கும்போது, தேவன் அவைகளைக் கேட்டு அவர்களுடைய இருதயத்தை தொடுகிறார். அதாவது அவர் அவர்களுக்கு உணர்வையும் புரிந்துக்கொள்ளுதலையும் தருகிறார். இவ்வாறு நாம் தேவனோடு சம்பாஷிக்க முடியும். அதாவது, நாம் தேவனோடு தனிப்பட்ட உறவு வைத்துக்கொள்ள முடியும். மேலும் நாம் தேவனுடைய சித்தத்தின்படி ஜெபித்தால், அவர் நீதிப்பிரமாணத்தின்படி நமக்குப் பதிலளிப்பார். இந்த சம்பவங்களின்மூலமாக, நாம் தேவனை நிச்சயமாக சந்தித்து அனுபவிக்க முடியும்.

மீண்டுமாக, ஊக்கம் என்பது ஜெபத்தின் மூலமாக நாம் தேவனைச் சந்திக்க முயற்சிக்கும்போது மிக முக்கியமான காரியமாக இருக்கிறது. குருடனாகிய பர்த்திமேயு இயேசுவைச் சந்திப்பதற்கு என்ன செய்தான் என்பதை நாம் அறிவோம். அவன் மாற்கு 10:47ல் சொல்கிறபடி, "இயேசுவே, தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்" என்று பதிவு செய்யப்பட்டுள்ளபடி கதறிக் கூப்பிட்டான். மற்றவர்கள் அவனை அமைதியாக இருக்கும்படி கடிந்துக்கொண்டபோது அவன் இன்னும் அதிகமாக சத்தத்தை உயர்த்தினான். இதன் காரணம் அவன் வாஞ்சை மிகப் பெரியதாய் இருந்தது.

அநேக தீர்க்கதரிசிகளும் ஜெபத்தில் கதறி கூப்பிட்டனர் (1 சாமுவேல் 7:9). இயேசுவும் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளியாக மாறி தரையில் விழும்வரை தமது முழு பெலத்தோடு ஜெபித்தார் (லூக்கா 22:44). இப்படிப்பட்ட இருதயத்தோடு நீங்கள் ஊக்கமாக ஜெபித்தால் நீங்கள் ஜெபிக்கும்போது வீணான சிந்தையோ அல்லது அசதியோ வராது. ஆக, ஜெபிக்கையில் தேவனை சந்திக்கிறோம் என்று பொங்கி வழிகிற நிச்சயத்தோடு உங்கள் முழு மனதோடு கதறி கூப்பிடுவீர்கள் என நம்புகிறேன். இப்படிச் செய்வதால், தேவனைத் தனிப்பட்ட முறையில் உங்கள் வாழ்வில் சந்திப்பீர்கள் என நம்புகிறேன்.

**4. நீங்கள் அழகான துதிகளை ஏறெடுக்க வேண்டும்.**

தேவன் துதிகளில் மிகவும் பிரியப்படுகிறார். அதுபோல அவருடைய பிள்ளைகள் துதிகளோடு அவரை உயர்த்தும்போது, தேவனுடைய இருதயமும், கண்களும், செவிகளும், தம்முடைய பிள்ளைகளுக்கு நேராக இருக்கும்.

இதன் காரணமாகவே நாம் துதிக்கும்போது சந்தோஷத்தால் உணர்வுகளால் நிரம்புகிறோம். வேதாகமத்தில், விசுவாசத்தின் முற்பிதாக்களும் கூட அடிக்கடி தேவனுக்கு துதிகளை ஏறெடுத்ததை நாம் பார்க்க முடிகிறது. இதில் முக்கியமான கதாபாத்திரம் தாவீது.

தாவீது தனியாக மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்தபோதும் சரி அல்லது ராஜாவாக தேவனுக்கு பலி செலுத்தியபோதும் சரி துதிகள் பாடுவதை அனுபவித்தான். தேவன் தாவீதை நேசித்தார். மேலும் துதிகளில் எல்லா நேரமும் அவர் அவனோடு இருந்தார். தாவீதால் பாடப்பட்ட துதிகள் ஒளியின் வல்லமையைக் கொண்டிருந்தன. தாவீது சுரமண்டலத்தை வாசித்தபோது, சவுலை துன்பப்படுத்திய அசுத்த ஆவிகள் விலகிச் சென்றன. 2 ராஜாக்கள் 3ல் சுரமண்டல வாத்தியக்காரன் இசைத்தபோது எலிசா தேவனால் அசைக்கப்பட்டு தேவனுடைய வார்த்தையைப் பெற்றான்.

நம்மை இரட்சித்து பரலோகத்திற்கு நம்மை வழிநடத்துகிற ஆண்டவரை இயல்பாகவே நாம் துதிக்க வேண்டும். ஆனால் நாம் தேவனை நற்குணத்தோடும் அன்போடும் வல்லமையோடும் துதிக்கும்போது அவர் மீண்டுமாய் தம்முடைய அன்பை நமக்குத் திரும்ப காண்பிப்பார். அழகான துதிகள் மூலமாக நீங்கள் ஒவ்வொரு நாளும் தேவனைச் சந்திப்பீர்கள் என நம்புகிறேன்.

**5. நீங்கள் ஆவியிலும் உண்மையிலும் ஜெபிக்க வேண்டும்.**

பழைய ஏற்பாட்டின் காலங்களில் விசுவாசத்தின் முற்பிதாக்கள் பலிகள் மூலமாக தேவனோடு தொடர்பு கொண்டார்கள். இராஜாவாகிய சாலமோன் ஆயிரம் பலிகள் செலுத்தி, தேவனைச் சந்தித்து, சகல ஆசீர்வாதங்களும் பொழிகிற ஞானத்தின் தேவனை அனுபவித்தான். அந்தப் பலிகள் புதிய ஏற்பாட்டின் காலங்களில் ஆராதனைகளுக்கு நிகராக இருக்கிறது.

யோவான் 4:24ல் இயேசு, "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுக்கொள்ள வேண்டும்" என்றார். இதன் அர்த்தம், நாம் ஆவியோடும் உண்மையோடும் ஆராதித்தால் ஆவியாயிருக்கிற தேவனை நாம் சந்திக்க முடியும். சுருக்கமாகச் சொன்னால், ஆவியோடும் உண்மையோடும் ஆராதித்தல் என்பது பரிசுத்த ஆவியின் உந்துதலில் நம்முடைய முழு மனதோடு ஆராதனை ஏறெடுக்கிறதைக் குறிக்கிறது.

அதிகாரப்பூர்வமான சபை ஆராதனைகளானாலும் சரி அல்லது சிறுகுழு ஆராதனைகளானாலும் சரி, நாம் நன்கு ஆராதிப்பதால் தேவனைச் சந்திக்க முடியும். அது மிகப் பெரிய ஆசீர்வாதமாகும். மேலும், ஆராதனைகள் என்பது தேவனைச் சந்திப்பதற்கான வார்த்தை, ஜெபம் மற்றும் துதி போன்ற அனைத்துப் பாதைகளையும் கொண்டுள்ளது. நம்முடைய முழு மனதோடு ஆவியோடும் உண்மையோடும் நாம் ஆராதிக்கும்போது, மேலிருந்து நம் மீது கிருபை ஊற்றப்படும். நாம் பரலோகத்திற்கான நம்பிக்கை, சமாதானம் மற்றும் மகிழ்ச்சியோடு நிரம்பி வழிவோம்.

நாம் ஜீவனுள்ள தேவனைச் சந்தித்தோம் என்பதைக் காட்டும் நிரூபணம் அது. நம்முடைய வாழ்வில் கிருபையைக் காத்துக்கொண்டால் நம்மோடுள்ள தேவனை நாம் எப்போதும் சந்திக்க முடியும்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, தேவனைச் சந்திப்பதற்கு நாம் வேதம், ஜெபம், துதி மற்றும் ஆராதனை மூலமாக தேவனை சந்திக்கக்கூடிய இடங்களுக்கு ஊக்கத்தோடு செல்ல வேண்டும். மிக அடிப்படையான காரியங்களே மிக முக்கியமான காரியங்கள் என நாம் நினைவுகூற வேண்டும். நீங்கள் சீக்கிரம் தேவனுடைய மெய்யான பிள்ளைகளாக மாறி, பூமியிலே அவரோடு நடந்து பின் புது எருசலேமில் அவரோடு என்றென்றும் வாழ வேண்டுமென ஆண்டவருடைய நாமத்தினால் நான் ஜெபிக்கிறேன்.

## விசுவாசத்தின் அறிக்கை

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நீத்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17:25]

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]

# எவ்வகையான ஜெபம் பதில்களை கீழே கொண்டு வரும்?

ஜெபம் என்பது தேவனுக்கும் இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளுக்கும் இடையேயுள்ள அன்பின் சம்பாஷணையாய் உள்ளது. சங்கீதம் 37:4ல், "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்" என்று வாசிக்கிறோம். நம்முடைய ஜெப தூபம் தேவனைப் பிரியப்படுத்தி அவருடைய இருதயத்தை அசைக்குமாயின் நாம் கேட்டுக் கொள்ளுகிறவைகளுக்கு மாத்திரமல்ல, நாம் கேளாத நம்முடைய மனவிருப்பங்களுக்கும் பதில்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.



## நற்குணத்தில் ஜெபம்

நற்குணமாகவே இருக்கும் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு நம்முடைய ஜெபமானது நல்ல இருதயத்திலிருந்து வருகிற நற்குணத்தின் அறிக்கையாக இருக்க வேண்டும்.

இருதயத்தில் நற்குணமுள்ள ஜனங்கள் நற்குணத்தின் அழகான வார்த்தைகளை மட்டுமே பேசுவர். அவர்கள் ஜெப வேளையில் அவர்களது குரல் வளம் தோரணையாகவும், நற்குணத்தின் வாசனையைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். ஆனால் ஒருவருடைய இருதயத்தில் தீமை இருக்குமாயின், அவர் அந்தளவு தீமையோடு ஜெபிப்பார்.

ஒரு நபர், "தேவனே என் கணவர் மனந்திரும்பி இரட்சிப்பை பெறச் செய்யும். அதை அவரது கால்களை உடைத்தாகிலும் செய்யும்" என்று ஜெபிக்கிறார் என வைத்துக்கொள்வோம். அவள் ஒரு ஆத்துமாவின் இரட்சிப்புக்காக ஜெபிக்கிறாள். ஆனால் சத்தியத்தின் ஒளியில் இந்த ஜெபமானது தீமையும் புத்தியீனதுமாக உள்ளது.

நீங்கள், "தேவனை, என் கடையை ஆசீர்வதியும். அருகாமையிலுள்ள கடையின் வாடிக்கையாளர்கள் அனைவரையும் என்னிடம் அனுப்பும். நான் உமக்கு ஆலய கட்டுமானப் பணிக்கான காணிக்கையை அதிகமாக கொடுத்து, தருமக் காணிக்கைகளை அதிகரிப்பேன்" என்று ஜெபிக்கிறீர்கள் என வைத்துக்கொள்வோம். இப்படி நீங்கள் ஜெபித்தால் ஆசீர்வாதம் வருவதற்கு மிகக் கஷ்டமாகிவிடும், காரணம் அது தேவனுக்கு முன்பாக பிரியமான தூபமாக சேர்த்து வைக்கப்பட முடியாது. மேலும் சஞ்சலத்தில், முறுமுறுப்பில் மற்றும் துயரத்தில் ஏறெடுக்கும் ஜெபங்களும் நற்குணத்தின் ஜெபங்களே அல்ல.

சிலர் தேவனிடம், "மற்ற மக்கள் எளிதாக ஆசீர்வாதங்களைப் பெற்று சாட்சி பகிர்கின்றனர். ஆனால் நான் எப்பொழுதும் கஷ்டத்தில் வாழ்கிறேன்" என்று ஜெபிக்கின்றனர். இப்பேற்பட்ட ஜெபம் ஒருபோதும் நற்குணத்திற்கானதல்ல. மேலம் அது தவறான அறிக்கையாகும்.

உண்மையென்னவென்றால், அவர்கள் பொறுமையற்றவர்களாய் ஜெபிக்கின்றனர். அவர்கள் பொறாமையோடும், எரிச்சலோடும், சுயநல விருப்பத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, தீவிரமாக ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபிக்கின்றனர். அவர்கள் தங்கள் இருதயத்திலிருக்கிற தீமையின் காரணத்தால் எந்த ஒரு விசுவாசமில்லாமல் சலிப்பினாலும் துக்கத்தினாலும் ஜெபிக்கின்றனர்.

நீங்கள் "மற்ற மக்கள்" தேவனுடைய ஆசீர்வாதத்தை பெறுவதைக் கண்டால், அவர்களிடமிருந்து அதை கற்றுக்கொள்ள வேண்டும். மேலும் அவர்கள் எளிமையாக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதையும், அவர்கள் ஒளியில் நடக்க கடினமாய் முயற்சித்ததால் அந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதையும் நீங்கள் அறிய வேண்டும். நீங்கள் எப்போதும் கஷ்டங்களில் வாழ்வீர்களானால், இது நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை என்பதைக் காண்பிக்கிறது. அதனால் நீங்கள் உங்கள் கிறிஸ்தவ வாழ்வை சற்று பின்நோக்கிப் பார்க்க வேண்டும்.

உங்களில் சிலர் உங்களுக்கு நல்ல இருதயமாகிய நிலம் இல்லையே என்று நினைக்கலாம். அப்படியானால், நீங்கள் உங்கள் இருதயமாகிய நிலத்தை நல்ல நிலமாக்குவதற்கு பொறுமையாக உங்களது சிறப்பை முயற்சிக்க வேண்டும். நீங்கள் மிக மெதுவாக புதுப்பிக்கப்படுகிறீர்கள் என்று நினைத்தால், உங்கள் இருதயமாகிய நிலம் கெட்டது என்பதினால் அல்ல, நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் பயிற்சி செய்யாத காரணத்தாலேயே.

நம்முடைய இருதயங்களில் தீமை இல்லையென்றால், நாம் எந்த ஒரு சூழ்நிலையிலும் நன்றியோடும் சந்தோஷத்தோடும் அறிக்கைச் செய்ய முடியும். தேவனுக்குப் பிரியமற்ற எந்த ஒரு காரியத்தையும் நாம் சொல்லமாட்டோம். நாம் எப்போதும் நன்றிகளின் ஜெபத்தையும் நம்முடைய மனவிருப்பத்தின் பதில்களுக்காக விசுவாசத்தின் ஜெபத்தையும் ஏறெடுப்போம். நாம் தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்கும்போது, தேவன் ஜெபதூபத்தை ஏற்றுக் கொண்டு அதற்குப் பதிலளிப்பார்.

## ஆண்டவரை சார்ந்து ஜெபம்

நீங்கள் உங்கள் சிந்தனைகளிலும் உங்கள் பெலத்தையும் சார்ந்துக் கொண்டால் ஜெபிப்பதைக் குறித்த காரியங்கள் ஓடிவிடும். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்னர் நீங்கள் சரீரத்திலும் சோர்வுற்று விடுவீர்கள். ஆனால் நீங்கள் பரிசுத்த ஆவியின் உதவியோடும், ஆண்டவர் அளிக்கும் கிருபையோடும் பெலத்தோடும் ஜெபித்தால் நீங்கள் விரும்புகிற அளவு உங்களால் ஜெபிக்கக் கூடும்.

சில நேரங்களுக்காக நீங்கள் விசுவாசத்தோடிருந்தால், ஜெபக் குறிப்பு கொடுக்கப்படும்போது, நீங்கள் அதற்காக என்ன ஜெபிக்க வேண்டும், எப்படி ஜெபிக்க வேண்டும் என அறிவீர்கள். ஜெபத்தில் நீங்கள் அறிந்தவற்றை மறுபடியும் ஒப்பித்து பழக்கதோஷமாக ஜெபித்தால், அது உங்களது குரலின் பதிவை நீங்கள் ஒலிப்பது போல இருக்கும். இப்பேற்பட்ட ஜெபம் ஜெப தூபமாகாது. மேலும் இந்த வகையான ஜெபம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

தேவனுடைய பிள்ளைகள் ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவரை சார்ந்துக் கொள்வதைப் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் உதவியில் ஜெபிக்க வேண்டும். ஜெபம் என்பது ஊக்கமான இருதயத்திலிருந்து நேரா நேராத்திற்கு பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளால் தேவன் கேட்க அவசியமாயிருக்கும் பொருளடக்கங்களுடன் ஏறெடுக்கப்பட வேண்டும்.

உதாரணமாக, நீங்கள் அரிசியை ஒரு மின் அரிசி சமைப்பானில் சமைக்கும்போது, நீங்கள் குறிப்பிட்ட அளவு அரிசி மற்றும் தண்ணீரை வைத்து பொத்தானை அழுத்துகிறீர்கள். ஆனால் பானையில் அரிசியை சமைத்தால், நீங்கள் அதிகமான பெலனையும் மனதையும் நீட்டிக்க வேண்டும். நீங்கள் அரிசியின் அளவையும், தண்ணீரின் அளவையும் அளக்க வேண்டும். சமைக்கும்போது நீங்கள் தீயையும் நிர்வாகிக்க வேண்டும். அதே போலத்தான் பழக்கத்தோஷமாக ஒரே காரியத்தைச் சொல்வதும், பரிசுத்த ஆவியில் ஜெபிப்பதும் மிக வித்தியாசம்.

நீங்கள் அவருடைய சத்தத்தை கேட்டு தேவ சித்தத்தை தேட முயற்சித்தால், நீங்கள் ஆவியினால் உந்தப்படுவீர்கள். தேவன் உங்களது ஜெபத்தின் பொருடக்கங்களையும் ஓட்டத்தையும் நிர்வாகிப்பார். அதனால் ஜெபத்தின் பொருளடக்கங்கள் உங்களிடமிருந்து சுரக்கும். உதாரணமாக, நீங்கள் ஆலய கட்டுமானப் பணிக்காக ஜெபிக்கும்போது, நீங்கள் ஒவ்வொரு முறையும் ஜெபிக்கையில் எவ்வகையான கருத்தோடு ஜெபிக்க வேண்டுமென நீங்கள் அறிந்துக் கொள்ளும்படி செய்வார். அப்போது நீங்களும் கருத்தில் கொள்ளப்பட்ட பகுதியில் எதற்காக ஜெபிக்க வேண்டுமென்ற விளக்கத்தைக் குறித்து வெளிப்பாடுகளைப் பெறலாம். நாம் ஆண்டவரைச் சார்ந்துக் கொண்டு ஆவியானவரின் வெளிப்பாட்டில் தேவையானவற்றிற்காக அச்சமயம் ஜெபிக்கும்போது, தேவன் அந்த ஜெபத்தில் பிரியப்படுவார்.

## அன்பில் ஜெபம்

நீங்கள் தேவனை, சபையை, மேய்ப்பரை மற்றும் ஆத்துமாக்களை நேசித்தால் ஜெபத்தில் தேவனுடைய அன்பை எண்ணி கண்ணீர் சிந்துவீர்கள். எதையும் உட்கொள்ளாமல் பரலோகத்தில் நமக்காக கண்ணீரோடு ஜெபிக்கும் ஆண்டவரை நீங்கள் நினைக்கும்போது நீங்கள் ஊக்கமாவீர்கள்.

மேலும், அன்போடு நீங்கள் சபைக்காகவும் மேய்ப்பருக்காகவும் ஜெபிக்கும்போது உங்களில் பற்றியெரிகிற அக்கினி இருக்க வேண்டும். நீங்கள் சத்தியத்தை அறியாமல் பாவம் செய்து மரித்துக் கொண்டிருக்கிற ஆத்துமாக்களை நினைக்கும்போது, உங்கள் இருதயம் கிழிக்கப்பட வேண்டும்.

உங்களுக்கு இப்படிப்பட்ட இருதயமிருந்தால், உங்களுக்கு ஆவிக்குரிய அன்பும் இருக்க வேண்டும் என்பதாகும். நீங்கள் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவர்களாய் இருக்கிறீர்களா, பிறருடைய ஆதாயத்தை முதலில் தேடுகிறீர்களா மற்றும் பிறருக்கு சேவைச் செய்வதற்காக உங்கள் சுயத்தை தியாகம் செய்கிறீர்களா என்பதை பரிசோதிக்கும்படியாக உங்களை ஊக்குவிக்கிறேன். மற்றவர்கள் உங்களைப் பார்க்கும்போது அவர்கள், "அவர்கள் உண்மையில் ஜெபிக்கிறவர்கள் போல இருக்கிறார்கள். அவர்களிடத்தில் தயாளமும் அன்பும் இருக்கிறது. அவர்கள் தாழ்மையாகவும் சாதுவாகவும் இனிமையானவர்களுமாய் இருக்கிறார்கள்" என்று சொல்ல வேண்டும்.

அப்போதுதான் தேவனுக்கான, சபை மற்றும் மேய்ப்பருக்கான உங்களது அன்பின் அறிக்கை அங்கீகரிக்கப்படும். அன்போடு கண்ணீரின் ஜெபங்களும் ஊக்கமான கூப்பிடுதலும் மட்டுமே தேவனிடம் திண்மமான தூபமாக ஏறெடுக்கப்பட முடியும். பாவம் செய்து மரணத்தின் பாதையில் இருக்கிற ஆத்துமாக்களுக்காக அவர்கள் நம்முடைய பிள்கைள் என்பது போல அன்போடு நாம் ஜெபிக்க வேண்டும்.



# "புகைப்படத்தின்மீது செய்த ஜெபத்தால் என்னுடைய தாத்தா உயிர்பெற்றார்"

சகோதரர் சாமுவேல், வயது 20, சென்னை மான்மின் சபை, இந்தியா

**2012 நவம்பர் மாதத்தில், ஒரு நாளில் நான் சாலையில் ஒரு பெண்மணியிடம் இருந்து *மான்மின் நியூஸ்* தமிழ் செய்தித்தாளையும், சென்னை மான்மின் பரிசுத்த சபையின் 8 ஆம் ஆண்டு விழாவிற்கான அழைப்பிதழையும் பெற்றேன். நான் 11 வயதில் என்னுடைய பெரியம்மாவுடன் மான்மின் சபையில் பங்கு பெற்றேன். ஆகவே மீண்டும் அந்த சபையைக் குறித்து கேள்விப்பட்டது அருமையாய் இருந்தது. நான் ஆண்டுவிழாவில் பங்கு பெற்று, செய்தி மற்றும் கலைநிகழ்ச்சியின் மூலமாக அதிகமான கிருபைகளை பெற்றுக் கொண்டேன்.**

**அதன்பிறகு, நான் சபைக்குத் தொடர்ந்து சென்று, GCN தொலைக்காட்சி (www.gcntv.org) வழியாக மான்மின் தலைமை சபையின் ஆராதனைகளில் பங்குபெற்றேன். நான் தலைமை போதகர் அறிவர் ஜேராக் லீ அவர்கள்மூலம் எப்படி ஜெபிப்பது, ஆராதிப்பது என்பதை கற்றுக்கொண்டேன். இன்றுவரை நடைபெறுகிற தேவனுடைய வல்லமையான செயல்களை கண்டு, நான் ஆச்சரியமடைந்தேன்.**

**தலைமை போதகருடைய *மரணத்திற்குமுன் நித்திய வாழ்வை ருசித்தல்* என்னும் அவருடைய சாட்சிப் புத்தகத்தை நான் தமிழில் வாசித்தபோது, தேவனிடத்தில் அவர் வைத்த அன்பு, நேர்மை மற்றும் ஆத்துமாக்களுக்கான அவருடைய ஊக்கமான அன்பினால் நான் நெகிழ்ந்துபோனேன். நான் *சிலுவையின் செய்தி* என்ற புத்தகத்தையும் வாசித்தேன். அந்தப் புத்தகத்தின் மூலம் மனிதப் பண்படுத்துதலில் அடங்கியிருக்கும் தேவனுடைய அநாதி தீர்மானத்தையும், இயேசு கிறிஸ்துவினுடைய சிலுவையின் அன்பையும் நான் உணர்ந்து கொண்டேன். அதன்பிறகு, என்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கை புதுப்பிக்கப்பட்டது.**

**நான் சந்தோஷமான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கையில், என்னுடைய தாத்தா தேவனுடைய பெரிதான வல்லமையான செயலை அனுபவித்தார்.**

**செப்டம்பர் 2014ல், பலவீனராக மாறியிருந்த 78 வயதான என் தாத்தா திடீரென்று பக்கவாதத்தின்நிமித்தம் நிலைகுலைந்தவராக கோமா நிலைக்குத் தள்ளப்பட்டார். அவரை மருத்துவமனையில் வைத்திருந்தோம், ஆனால் மருத்துவர்கள் அவர் உயிர்வாழ்வதற்கு** இனி ஒரு வாய்ப்பும் இல்லை என்று சொல்லிவிட்டனர். ஆகவே, அவரை அக்டோபர் 6 அன்று வீட்டிற்கு கொண்டு வந்தோம்.

அவருக்காக எதையும் எங்களால் செய்யமுடியாததால் நாங்கள் மிகுந்த வருத்தத்தில் இருந்தோம். அவருடைய மரணத்தை காணும்படி காத்திருந்தோம். அந்த சரியான தருணத்தில், எங்களுடைய சபை மான்மின் தலைமை சபையின் விசேஷித்த தானியேல் ஜெபக்கூட்டத்தில் இணைந்து பங்குபெற்றது.

என்னுடைய தாத்தாவிற்காக நான் பொருத்தனை ஜெபத்தை ஏறெடுத்தேன். போதகர் ஜோசப் ஹான் அவர்கள் தலைமை சபையின் ஆண்டுவிழாவிற்காக கொரியாவிற்குச் செல்கிறார் என்று நான் கேள்விப்பட்டேன். நான் அவரிடத்தில் தலைமை போதகருடைய ஜெபத்தைப் பெறும்படிக்கு என்னுடைய தாத்தாவின் புகைப்படத்தையும், காணிக்கையையும் கொடுத்தேன்.

அக்டோபர் 10 அன்று, தலைமை போதகர் அவருக்காக புகைப்படத்தின்மீது கரத்தை வைத்து ஜெபித்தபோது, என் தாத்தா ஜெபத்தின் மூலமாக உயிர்பெற்றார்! அவர் தன்னுடைய குடும்பத்தினரை அடையாளங்கண்டார், நன்றாய் சாப்பிட்டார், நிற்கவும் உட்காரவும் நடக்கவும் அவரால் முடிகிறது. ஹலேலூயா!

இந்த சம்பவம் சென்னை மான்மின் சபையில் பங்குபெற்றுக் கொண்டிருக்கிற என்னுடைய எட்டு உறவினர்கள் தங்களுடைய விசுவாசத்தில் வளருவதற்கு ஏதுவான நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது. சந்தோஷ் என்ற 5 வயதாகும் என் அண்ணன் மகன் சூடான தேநீரால் மிகுந்த காயமடைந்தான். எனினும், கைக்குட்டை ஜெபம் மற்றும் மூவான் மதுர தண்ணீர் மூலமாக அவன் சுகமடைந்தான்.

நான் கல்லூரியில் இளங்கலை படிப்பு படிக்கிறேன். நான் கல்லூரிக்குச் செல்வதற்கு முன் தலைமை போதகருடைய ஜெபத்தைப் பெற்றுவிட்டுத்தான் செல்வேன். நான் அநுதினமும் காலையில் மூவான் மதுர தண்ணீரை பருகுகிறேன். நான் வேதாகமம் வாசித்து, ஒவ்வொரு நாளும் முக்கிய வேதாகம வசனங்களை மனப்பாடம் செய்கிறேன். தற்போது நான் சென்னை மான்மின் சபையின் சகோதரர்கள் பாடற்குழுவைச் சார்ந்துள்ளேன்.

நான் கல்லூரி படிப்பிற்குப் பிறகு ஒரு பெரிய தொழிலதிபராக மாற விரும்புகிறேன். அதன்மூலம் நான் சபையின் பொருளாதார தேவைகளை தாங்கி, ஏழைகளுக்கு உதவி செய்ய விரும்புகிறேன். நான் நல்லதொரு அழகான வாழ்க்கையை வாழும்படி என்னை நடத்திக் கொண்டு வருகிற அன்பின் ஆண்டவருக்கு என்னுடைய ஆழ்ந்த நன்றிகளை தெரிவிக்கிறேன்.



அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்தின் மூலமாக சாமுவேலுடைய தாத்தா மரணத்தின் அபாயத்திலிருந்து ஜீவனுக்கு திரும்பினார். அவர் அண்ணன் மகன் சந்தோஷ் காயத்திலிருந்து சுகமடைந்தான் (முன் வரிசை, வலது). சாமுவேல் (கடைசி வரிசை, இடது) தன்னுடைய சகோதரன் மற்றும் உறவினர்களுடன் போட்டோவுக்காக போஸ் கொடுத்த காட்சி.

# "வல்லமையான ஜெபத்தினால் நான் மூளை இரத்தக் கசிவிலிருந்து சுகமடைந்தேன்"

**மூத்த கண்காணியை ஹயோசூன் பார்க்**, வயது 70, 1வது மாகாணம், தென் கொரியா



மார்ச் 2015ல், நான் ஒரு விபத்தைச் சந்தித்தேன். நான் என் வீட்டிலே ஒரு மின் விளக்கை பொருத்துவதற்காக ஒரு நாற்காலி மீது ஏறினேன். அச்சமயம் நாற்காலியின் கால் பகுதி உடைந்து, நான் கீழே விழுந்ததால், சுயநினைவை முற்றிலும் இழந்து போனேன். நான் தனியாக வாழ்பவள். சிறிது நேரம் கடந்தபிறகு நான் கண் விழித்தேன், ஆனால் நான் இன்னமும் பாதி நினைவில்தான் இருந்தேன். நான் அறிவர்.ஜேராக் லீ அவர்களுடைய தானியங்கி முறைமையில் பதிவு செய்யப்பட்டிருந்த வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். பிறகு சீக்கிரமே நான் முழுவதும் நினைவுக்கு திரும்பினேன்.


இந்த விபத்து நடந்த ஒரு வாரத்திற்குப் பிறகு தலைவலி, மயக்கம், மற்றும் சரீரத்தின் கீழ்ப்பகுதி பெலனற்றிருப்பதையும் நான் உணர்ந்தேன். நான் ஒவ்வொரு நாள் இரவும் தானியேல் ஜெபக்கூடுகையில் பங்குபெற்று, அதிகாலையில் ஒரு மணி நேரம் ஜெபித்தேன். ஜெப வேளையில், நான் ஏன் தேவனுடைய பாதுகாப்பின்கீழ் இருக்கவில்லை என்பதற்கான காரணத்தை ஆராய்ந்துப் பார்த்தேன். நான் உண்மையுள்ளவளாய் இருக்கிறேன் என்று நினைத்துக்கொண்டு தேவனுடைய விருப்பத்தின்படி அநேக காரியங்களைச் செய்யாமல் என்னுடைய விருப்பத்தின்படி செய்ததை உணர்ந்து கொண்டேன்.

இன்னமும் எனக்கு தலைவலியும் மயக்க உணர்வும் இருந்தது. நான் சரியாக நடக்கமுடியாமல், பசியுணர்வையும் எடையையும் இழந்துப்போனேன். மார்ச் மாதத்தின் கடைசியில், நான் என்னுடைய பகுதி போதகரிடமிருந்து கைக்குட்டை (அப்போஸ்தலர் 19:11–12) ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். அதன் பிறகு எனக்கு தலைவலி குறைந்தது, சரியாக நடக்கவும் முடிந்தது. என்ன தவறு நிகழ்ந்தது என்பதை சரியாக அறிந்துகொள்வதற்காக ஏப்ரல் 16 அன்று நான் மருத்துவமனைக்குச் சென்று MRI ஸ்கேன் எடுத்தேன். அதன் முடிவு சரியாக அறியப்படாததால் நான் CT ஸ்கேனையும் எடுத்தேன். என் மூளையின் பாதி பகுதி தெளிவாகவும், மற்ற பகுதி மங்கலாகவும் தெரிந்தது. சிறிய இரத்த நாளங்கள் வெடித்து, இரத்தம் வெளியேறி சேர்ந்துகொண்டதால் என்னுடைய மூளை சுருங்கிப்போனது. நான் அறுவை சிகிச்சை செய்யவேண்டிய அவசர நிலையில் இருந்தேன். நான் அதிர்ச்சியடைந்தாலும், எண்ணற்ற வல்லமையான செயல்களை பார்த்திருப்பதினால் தேவனால் சுகத்தைப் பெறுவதையே விரும்பினேன்.


நான் ஊக்கமாக ஜெபித்து மனந்திரும்பினேன். நான் சரியென்று நினைத்துக்கொண்டு என்னுடைய சுய கருத்தை வலியுறுத்தி மற்றவர்களுக்கு கடினமான நேரத்தை கொடுத்திருக்கிறேன். நான் சமாதானத்தை உடைத்திருக்கிறேன்; மற்றவர்கள் என்னோடு ஒத்துப் போகாத நேரங்களில் நான் அவர்களை நியாயந்தீர்த்து குற்றப்படுத்தியிருக்கிறேன். இதைப் பற்றி நான் மனந்திரும்பினேன்.

ஏப்ரல் 27 அன்று, பெண்கள் குழுவை வழிநடத்துகிற போதகர் உயர்திரு. ஹீசன் லீ அவர்களுடைய உதவியின் மூலம் நான் நேரத்திற்கும், இடத்திற்கும் அப்பாற்பட்டு கிரியைகளை நடப்பிக்கக்கூடிய தலைமை போதகருடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். ஜெபத்திற்குப் பிறகு, எனக்கிருந்த அறிகுறிகள் யாவும் போய்விட்டது. எப்படியிருந்தாலும், நான் இன்னமும் ஏதோ ஒன்று தீர்வாகாதது போல உணர்ந்தேன். நான் இன்னும் எதைக் குறித்து மனந்திரும்ப வேண்டும் என்பதை அறிய முயற்சித்தேன். சீக்கிரத்திலே ஒரு போதகரை குறித்து நான் அசௌகரிய உணர்வோடு இருந்தது என் நினைவிற்கு வந்தது. நான் உடனே அதைக் குறித்து மனந்திரும்பினேன். பிறகு, என்னுடைய நிலைமை முழுவதும் இயல்பாக மாறியது. அனைத்தும் தலைமை போதகருடைய மறு சிருஷ்டிப்பின் வல்லமையால் புதுப்பிக்கப்பட்டது. அல்லேலூயா!

நான் மறுபடியும் பிறந்தேன். நான் என்னுடைய சுய–நீதியை உடைத்து, மற்றவர்களை தாழ்மையோடும் கனிவோடும் கருதும்படியாக முயற்சி செய்துக் கொண்டு வருகிறேன். நான் மிகுந்த சந்தோஷத்தை உணருகிறேன். ஆவியிலும், சரீரத்திலும் என்னை ஆசீர்வதித்த தேவனுக்கு நான் சகல நன்றிகளையும், மகிமையையும் செலுத்துகிறேன்.




இடது மூளையின் முன்மடலில் வளர் பிறை சந்திரனைப் போன்று இரத்தக் கசிவு இருந்தது.




இரத்தக் கசிவு இல்லை

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com